**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.10/2026 இன் அ.வ.எண்.227/2019**

1) பெருமாள் பல்லவராயர் (இறப்பு)
2) P. சந்திரசேகர்
3) P. முத்து ஆனந்தன்
4) P. செல்வம்,
அக்தார்கள், ஸ்ரீபுது அம்மன்
திருக்கோவில், கண்டியப்பேரி ... மனுதாரர்கள் / வாதிகள்

–எதிர்–

1) சின்னத்துரை
2) சுஜின்ராஜா ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பாக 28.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14 (3) பிரிவு 151–ன் படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கானது 23.06.2026 ம் தேதி குறுக்கு விசாரணை செய்வதற்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது என்றும் மனுதாரர்கள்

தரப்பில் குறுக்கு விசாணைக்கு தயார் செய்யும் சமயம் மனுதாரர்களுக்கு 12.05.1908 ம் தேதியிட்ட உயில் பத்திரம் கிடைக்கவில்லை என்றும் மேற்படி உயில் தற்போது தான் கிடைத்தது என்றும் தபசில் சொத்தை பொறுத்து மாடத்தியம்மாள் என்ற மகாலெட்சுமி அம்மாள் 12.05.1908 ம் தேதியிட்டு எழுதி வைத்த உயில் மற்றும் சர்வே எண்கள்.2630, 2632 ன் நகரளவை பதிவேடுகள் ஆகிய ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களாக ஏற்றுக் கொண்டு குறியீடு செய்ய வேண்டியது அவசியம் என்றும் இல்லாவிட்டால் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

**3) எதிருரை சுருக்கம்**

மனுதாரர்கள் தாக்கல் செய்த மனு சட்டப்படியோ அல்லது பொருண்மைகளின்படியோ நிலைக்கத்தக்கதல்ல என்றும், ஆரம்பநிலையிலேயே தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பெறக்கூடாது என்றும் மனுதாரர்கள் தங்களது அபிடவிட்டில் இதற்கு முன்பு மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யாததற்கான காரணங்களை குறிப்பிடவில்லை என்றும் எனவே, இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியத்தையும் மற்றும் சான்றாவணத்தையும் முன்னிறுத்தவில்லை.

5) **இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர்கள் கோரியவாறு மனுவில் குறிப்பிட்ட ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்வதற்கு உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**

6) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

7) இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள் ஆவார்கள். எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள் ஆவார்கள். அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 ஐ எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக அசல் வழக்கு ஒத்திவைக்கப்பட்ட போது இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர்கள் தரப்பில் தற்போது தான் 12.05.1908ம் தேதியிட்ட உயில் பத்திரம் கிடைத்தது என்றும் எனவே தபசில் சொத்தை பொறுத்து மாடத்தியம்மாள் என்ற மகாலெட்சுமி அம்மாள் 12.05.1908 ம் தேதியிட்டு உயில் மற்றும் சர்வே எண்கள்.2630, 2632 ன் நகரளவை பதிவேடுகள் ஆகிய ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களாக மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்வதற்கு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களானது அசல் வழக்கை சரியான வகையில் தீர்வு காண்பதற்கு உதவ வாய்ப்பு இருந்தாலும், இருக்கலாம் என்பதாலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஆவணங்களை பற்றி குறுக்கு விசாரணையில் கேள்வி கேட்டுக்கொள்ள வாய்ப்பு உள்ளது என்பதாலும், மனுதாரர்களுக்கு தனது வழக்கை நிரூபிக்க மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கலாம் என நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) மேலும், மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக மட்டும் தான் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாலும் மேலும், வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தற்போது வரை செய்யப்படாமல் உள்ளது என்பதாலும் எனவே நீதியின் நலன் கருதியும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனுவையும் அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு சிறந்ததாக அமையும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியில், இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
Orders uploaded on 10.08.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.08.10 18:20:59 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

**இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
Orders uploaded on 10.08.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.08.10 18:21:08 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி
**இ.ம.எண்.10/2026 இன்**
**அ.வ.எண்.227/2019**
வரைவு/ நேரிய உத்தரவு
10.08.2026